ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீவேதாந்ததேஶிக யதீந்த்ரமஹாதேஶிகாய நம:

# இஞ்சிமேட்டு ஸ்ரீமத் அழகியசிங்கரின் மேதாவிலாஸம்

சோகத்தூர் ராமாநுஜாசார்யர், பெங்களூர்

ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபனாசார்ய, பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய, ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரோபய-வேதாந்தாசார்ய, ஸ்ரீபகவத்ராமாநுஜஸித்தாந்த நிர்த்தாரணஸார்வபௌம, ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீஸ்ரீரங்க ஶடகோபயதீந்த்ரமஹாதேஶிகரான இஞ்சிமேட்டு ஸ்ரீமதழகியசிங்கரின் 90-வது ஆஸ்தானஸ்வீகாரமஹோத்ஸவத்தை முன்னிட்டு அவ்வழகியசிங்கரின் பல க்ரந்தங்களில் அவருடைய புத்திக்கூர்மை வெளிப்படுவதை அநுபவிக்க ஒரு வாய்ப்பு அடியேனுக்கும் கிடைத்திருந்து, ஸ்ரீஸ்வாமி தேஶிகனின் ஸ்ரீபாஷ்யவ்யாக்யானமான ஸ்ரீதத்த்வடீகையைக் குறித்து இஞ்சிமேட்டு ஸ்ரீமத் அழகியசிங்கரின் பூமிகை என்னும் முன்னுரை எவ்வளவு உயர்தரமானது என்பதை இங்குச் சிறிது விண்ணப்பித்து க்ருதார்த்தனாகிறேன்.

இஞ்சிமேட்டு ஸ்ரீமத் அழகியசிங்கர் தத்த்வடீகையின் பூமிகையில் ஸ்வாமி ஸ்ரீதேஶிகனின் க்ரந்தங்களில் ஸ்ரீபாஷ்யத்தின் எல்லாக் கருத்துக்களையும் மிகத் தெளிவாக வெளியிடுவதால் மிகவும் உயர்ந்தது தத்த்வடீகை, என்று ஸாதிக்கிறார் மங்களபத்யத்தில்.

பிறகு ஸ்வாமி ஸ்ரீதேஶிகனின் திருவேங்கடமுடையானின் கண்டாவதாரமாம் பெருமை, ஸங்கல்பஸூர்யோதயத்தில் ஸ்வாமியே 'வித்ராஸிநீ விபுதவைரி வரூதிநீநாம்' என்ற ஶ்லோகத்தில் வெளியிட்டபடி விளக்கினார். இங்கு 'உபபத்திபூம்நா' என்பதற்கு தன் ஒலியினால் ஆஸுரப்ரக்ருதிகளான பாஹ்ய குத்ருஷ்டி மதங்களுக்குப் பெரும் பயத்தை விளைவித்தல், வாதப்போர்களில் வியப்பு மூட்டும் ஓங்காரம் போன்ற சொற்றொடர்களை உண்டுபண்ணுதல், மற்றும் எம்பெருமானின் பணிவிடையிலேயே ஒன்றியிருத்தல் முதலிய பண்பு ஒற்றுமைகளால் திருவேங்கடமுடையானின் திருமணியே ஸ்வாமி ஸ்ரீதேஶிகனாகத் தோன்றிற்று என வல்லவர்கள் நன்கு யூகிக்கிறார்கள் என்று **அநுமாநப்ரயோக** மூலமாகக் காட்டுகிறார். ஸ்வாமியின் திருத்தாயார் கனவில் திருவேங்கடமுடையான் தனது கண்டையைக் கொடுத்து விழுங்கச் சொல்ல, அவரும் அவ்வாறே செய்து, பன்னிரண்டு ஆண்டுகள் கருவுற்று விரிதிரைநீர் வையத்துள்ளே வேதாந்தவாரியனென்றியம்ப நின்ற சிறந்த ஆண்மகவைப் பெற்றெடுத்தாள் என்பதும் மேற்கூறிய காரணங்களை பலப்படுத்துகின்றன. புரட்டாசித் திருவோணத்து திருவேங்கடமுடையானின் தீர்த்தவாரியன்று அவதரித்ததும் கவனிக்கத் தக்கது.

பின்னர், ஸ்வாமியின் பிறப்பிடம் தூப்புல், திருப்பாட்டனார் பல யாகங்களைச் செய்த புண்டரீகாக்ஷஸூரி, திருத்தகப்பனார் பற்பல ஶாஸ்த்ரங்களில் ஆழ்ந்த புலமையுடைய அனந்தார்யர், திருத்தாயார் தோதாரம்பா அம்மையார் முதலியவற்றையும், பிறந்த வருடம் விபவ அல்லது ஶுக்ல என்பதில் வித்வான்களுக்குள் உள்ள கருத்து வேற்றுமையையும், விபவ வருடமே பெரும்பாலும் ஏற்புடையது எனவும் தெளிவித்திருக்கிறார். வேதநூல் பிராயம் நூறு முழுக்க எழுந்தருளியிருந்து, ஸௌம்ய வருடம் பரமபதித்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

வாத்ஸ்ய வரதார்யரெனும் ஸ்ரீநடாதூரம்மாளின் அநுக்ரஹத்துக்கு இலக்காதல், தமது தாய்மாமனான கிடாம்பி அப்புள்ளார் ஆசார்யராதல், ஸ்ரீஹயக்ரீவனின் ஸாக்ஷாத்காரம், வேதாந்தாசார்யர் முதலிய பிருதங்களைப் பெறுதல், காஞ்சியில் தத்த்வடீகை அநுக்ரஹித்தல், (அது ஶாரீரக ஶாஸ்த்ரத்தின் ஶரீரத்தை, அதாவது, ப்ரஹ்மஸூத்ரத்தின் உட்கருத்தைச் செவ்வனே வெளியிடும் ஸ்ரீபாஷ்யத்தின் ஒவ்வொரு எழுத்தைக் கூட விடாமல் தெளிய விளக்குவதால் ஶததூஷணீ முதலியவற்றை விட இது

உயர்ந்தது என ஸ்வாமியே 'ஶாதிதஶ்ஶததூஷண்யாம் ஶங்கராதிமுதாக்ரஹ: । ஶாரீரகஶரீரம் து வ்யக்தமத்ர ப்ரதர்ஶ்யதே ॥' என்னும் ஶ்லோகத்தில் ஸாதித்திருப்பதால் தெரிய வருகிறது.), தத்த்வடீகை ஸ்வாமி ஸ்ரீபாஷ்யத்தை இருபத்தெட்டாவது முறை காலக்ஷேபம் ஸாதித்த போது இயற்றப் பெற்றது, இது பூர்வமீமாம்ஸாஸூத்ரத்தின் ஶாபரபாஷ்ய, வார்த்திகம் முதலியவற்றைக் காட்டிலும் மற்றும் ஸ்ரீபாஷ்யத்துக்கு மற்றுள்ள உரைகளைக் காட்டிலும் உயர்ந்தது, தத்த்வடீகை மற்றும் மீமாம்ஸா-வார்த்திகங்களின் ஐந்து முக்கிய வேற்றுமைகளைக் விளக்கிக் காட்டும் சுருக்கம், ஶாபர பாஷ்யத்தைக் காட்டிலும் தத்த்வடீகையின் மேன்மை, பூர்வ, உத்தர மீமாம்ஸைகள் ஒரே ஶாஸ்த்ரம் எனல் ஶங்கரருக்கும் ஏற்புடையது, உபவர்ஷரும் - போதாயனரே உபவர்ஷரெனும் ப்ரஹ்மஸூத்ர வ்ருத்திகாரர். இவர் தான் மிகப் பழையதான விஶிஷ்டாத்வைதத்தின் முதல் ஸ்தாபகர் - அப்படியே கருதுகிறார், தத்த்வடீகை ஶ்ருதப்ரகாஶிகையை விடவும் உயர்ந்தது, இது ஶ்ருதப்ரகாஶிகைக்குப் பிறகே இயற்றப்பெற்றது, இவ்வளவு பெருமை வாய்ந்த இக் க்ரந்தரத்னம் ஜிஜ்ஞாஸாதிகரண ஶ்ருதிகட்டத்திற்கு முன் வரை தான் கிடைக்கிறதென்பது நமது தௌர்ப்பாக்கியமே என்பது போன்ற விஷயங்கள் இந்த பூமிகையில் இடம் பெற்றுள்ளன.

இவற்றில் சில இடங்களை மட்டும் இக்கட்டுரையில் சற்று பார்ப்போம்.

தத்த்வடீகை ஶ்ருதப்ரகாஶிகையை விட உயர்ந்தது என்பதை வெகு நேர்த்தியாக ஸ்ரீமதழகியசிங்கர், ஶ்ருதப்ரகாஶிகை ஸ்ரீபாஷ்யத்தின் பழமையான உரைகளில் மிக எளியனவும் மிக ஆழ்ந்து, பரந்தனவுமான சொல்லமைப்பினால் மெருகூட்டப்பெற்று யாராவது தன்னை (இக்க்ரந்தத்தை) எளிதில் அறிவேன் என நினைத்தால் அப்பேர்ப்பட்டவரின் கர்வத்தை அடக்குவது, வ்யாஸார்யரின் ஸ்ரீஸூக்தியான ஶ்ருதப்ரகாஶிகை என்று பூர்வர்களால் கொண்டாடப்பெற்று மிக உயர்ந்ததாயினும், அதில் சொல்லப்படாத அவஶ்யமான பல பொருட்களைத் தெளிவிப்பதாலும், சிற்சிலவிடங்களில் ஶ்ருதப்ரகாஶிகையின் கருத்தை விவரிப்பதாலும் தத்த்வடீகை அதைவிட மிக மேம்பட்டது. ஆகவே ஶ்ருதப்ரகாஶிகை அறியப்பட்டால் தத்த்வடீகை அறியப்பட்டதாகாது.

ஸ்ரீபாஷ்யத்தின் முதல் ஶ்லோகத்திற்கு பத்து அர்த்தங்களை வெளியிட்டிருப்பதொன்றே தத்த்வடீகை எல்லாவற்றிலும் சிறந்ததென்னப் போதிய சான்றாகும். அங்கு भुवन(புவன)ஶப்தத்தின் பொருள், படைக்கப்படும் எல்லா ப்ரஹ்மாண்டங்களும் என, ப்ரஹ்மா முதலியவர்களிலிருந்து பரப்ரம்ஹத்துக்கு வேறுபாட்டைத் தீர்மானித்தல், स्थेम(ஸ்தேம)ஶப்தத்தில் சொற்குற்றமில்லாமையை நிலைநாட்டுதல், अखिल(அகில) முதலிய எல்லாச் சொற்களும் எதிர்க்கட்சி(ப்ரதிவாதி)களிலிருந்து வேறுபாட்டைக் குறித்தல் ஆகியன கொண்டும் இதை நன்கு அறியலாம்.

தத்த்வடீகையில் ஸ்ரீபாஷ்யத்தின் ஒவ்வொரு சொல்லுக்கும் உரையிடும் பாங்கு ஶ்ருதப்ரகாஶிகையை விட மேம்பட்டது. இதை ஸ்ரீமதழகியசிங்கர் பல எடுத்துக்காட்டுகளைக் கொண்டு நிரூபிக்கிறார். அவற்றுள், वाक्यात् वाक्यार्थज्ञानमात्रं (வாக்யாத் வாக்யார்த்தஜ்ஞானமாத்ரம்) என்றவிடத்து, ஸ்வாமி டீகையில், அத்வைதமதக் கொள்கையை ஒன்று சேர்த்து மிக அழகாக, अत्रैवमद्वैतसंप्रदायरहस्यम् (அத்ரைவமத்வைதஸம்ப்ரதாயரஹஸ்யம்) எனத் தொடங்கி ஸாதித்திருப்பது பல அத்வைத நூல்களில் கூட காணக்கிடைக்காததெனக் காட்டுகிறார். அதாவது, அவித்யையில் மூன்று அம்ஶங்கள் உள்ளன. மேலெழுந்தவாரியான அறிவு आपातिकं (ஆபாதிகம்) நிஶ்சயமின்மையால் அவித்யையைப் போக்காது. ஆராய்ந்து வரும் அறிவோ ப்ரமத்தை உண்டாக்கும் அம்ஶத்தைப் போக்குமாயினும், அநாதியான வாஸனை தொடர்வதால் அதைச் சார்ந்த ப்ரமமானது அத்வைதஸாக்ஷாத்காரத்தால் நீங்கும். இதை ஜீவந்முக்திதஶை என்பர். இந்த அம்ஶமும் கடைசியான ஆத்மானுபவத்தால் கழியும். அவற்றில் இங்கு இரண்டாவது அம்ஶம் சொல்லப் படுகிறது என. இவ்வாறு அவித்யையின் மூன்று அம்ஶங்களையும் விளக்கிக் காட்டாவிடில் பாஷ்யபங்க்தி சரிவரப் புரியாது. ஶ்ருதப்ரகாஶிகையில் இவ்வாறு இல்லாததால்

ஐயம் தொடரும் வாய்ப்பு உள்ளது. இப்படியே த்யானமும் தர்ஶநஸமாநாகாரம் ஆகும்போது ஸமாதி எனப்படும் என்பதை டீகை தான் மிகத் தெளிவாக விளக்கியுள்ளது.

இப்படி தமது அநிதரஸாதாரணமான தர்க்கபாண்டித்யத்தால் மிக நுண்ணிய ஆராய்ச்சிகளைக் கொண்டு ஸ்ரீமதழகியசிங்கர் தத்த்வடீகையின் உண்மையான ஏற்றத்தை இந்த பூமிகையில் நிலைநாட்டி இருக்கிறார்.

ஸ்ரீமதழகியசிங்கரின் ஶ்ராத்தமந்த்ரவ்யாக்யானத்தை சுவடியிலிருந்து வெளியிட்டபோதும் அவருடைய வேதவித்த்வம் நன்கு புலப்பட்டதை அனுபவிக்கப் பெற்றேன். ஸந்த்யாவந்தனபாஷ்யத்தின் தமிழாக்கமும் இதை பறைசாற்றுகிறது. இப்படி தாம் உயர்ந்த பண்டிதோத்தமராயிருந்தும் பலரை ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா மாதப் பத்திரிக்கை, மாலோல வித்வத் ஸதஸ், மதுராந்தகம் பாடஶாலை முதலியவற்றை நிறுவி உயர்ந்த வித்வான்களாக்கியும், பல உயர்ந்த வித்வான்களை கௌரவித்தும் ஊக்குவித்தும் பெரும்புகழ் எய்தியுள்ளார் நம் ஸ்ரீமதழகியசிங்கர். இந்த ஊக்குவிக்கும் மஹாகுணம், நம் தர்ஶனத்தின் ஸமீசீனமான ஜ்ஞானம் எல்லோருக்கும் விளங்கும்படியாக இயற்றுவிக்கப்பட்ட **ஸ்ரீவிஶிஷ்டாத்வைதகோஶ**த்தினால் ப்ரகாஶிக்கிறது.

ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீ.உ.வே. பண்டிதராஜ D.T. திருவரங்கம் திருமலை தாதாசார்ய ஸ்வாமியின் தலைமையில் ஒரு வித்வன்மண்டலியை அமைத்து அதனால் மேற்சொன்ன கோஶத்தை உருவாக்கி என்றும் மங்காப் புகழ் எய்தினார். வடமொழியில் சுமார் பத்தாயிரம் சொற்களும், தமிழில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட விஶிஷ்டாத்வைதக் கொள்கைகளை விளக்கும் சொற்களுடன் விளங்கும் இக்கோஶம் 1951ம் ஆண்டு வெளிவந்தது.

மொழிகளில் வழங்கும் சொற்களுக்கு பொருளுடன் அகராதியாக வரிசையாகக் கோர்த்த நூல்களை கோஶம் என்பர். வடமொழியில் அவை பலவகைப்பட்டு அறிஞர்களால் ஆக்கப்பட்டுள்ளன. அமரகோஶம், வைஜயந்தீ, ஹலாயுதம், விஶ்வம் போன்ற ஶ்லோகரூபமானவை ப்ராசீனமானவும், ஒரே பொருளுடைய சொற்கள், சொற்களின் லிங்கத்தை அறிவிப்பன போன்று மனப்பாடத்திற்கு ஏற்ப அமைந்து வெகு காலமாக வழக்கத்தில் உள்ளன. வேதச்சொற்களுக்கு நிகண்டு, யாஸ்கரின் நிருக்தம் முதலியன ஸ்வரங்களின் வேறுபாட்டால் பொருள் மாற்றத்தை அறிவிக்கின்றன. டிக்ஷனரி எனப்படும் அகராதிகள் ஸமீபகாலத்தில் ஆங்கிலம் முதலிய மொழிகளுக்கு ஏற்பட்டு ஸம்ஸ்க்ருதத்திலும் வாசஸ்பத்யம், ஶப்தகல்பத்ருமம், ஶப்தார்த்தகௌஸ்துபம், ஆப்டே டிக்ஷனரி போன்றவை ராமாயண, மஹாபாரத, காவ்ய, நாடகங்களிலுள்ள உலகவழக்குச் சொற்களைக் கோர்த்துக் கொடுத்து உதவுகின்றன.

பின்னர், ந்யாய, மீமாம்ஸா, தர்மஶாஸ்த்ர, ஶ்ரௌதகோஶம் முதலிய ஶாஸ்த்ர க்ரந்தங்களுக்கு உதவியானவை அந்தந்த ஶாஸ்த்ரத்தின் ப்ரமேயத்தை நன்கு அறிய அகரவரிசையாக இயற்றப் பெற்றன. இவ்வழியில் விஶிஷ்டாத்வைத வேதாந்தத்தின் ஸித்தாந்த சொற்களைக் கோர்த்து நேர்த்தியாக ஒரு கோஶம் அமைக்க இஞ்சிமேட்டு ஸ்ரீமதழகியசிங்கரின் நியமனத்தால் 108 மிக ப்ரஸித்தமான க்ரந்தங்களிலிருந்து மேற்கோள் காட்டி விளக்கப்பட்டுள்ளது. இதை மனப் பாடம் செய்தால் உயர்ந்த வேதாந்த வ்யுத்பத்தி ஏற்படும். ஸந்தேஹங்களைத் தீர்க்க உடனே உதவும்.

ஸ்ரீமந்நாதமுனிகளின் காலத்திலிருந்து ஸ்ரீஆளவந்தார், ஸ்ரீபாஷ்யகாரர், திருக்குருகைப்பிரான் பிள்ளான், கூரத்தாழ்வான், பட்டர், நடாதூர் அம்மாள், ஶ்ருதப்ரகாஶிகாசார்யர், அப்புள்ளார், ஸ்வாமி ஸ்ரீதேஶிகன், ஸ்ரீமதாதிவண்ஶடகோபஸ்வாமி முதல் பல அழகியசிங்கர்கள், உபநிஷத் பாஷ்யகாரர் போன்ற பல ஆசார்யர்களால் தம்தம் க்ரந்தங்களில் பலவாறு அவ்வப்போதைய தேவைகளுக்குத் தகுந்த வகையில் நம் ஸித்தாந்தக் கருத்துக்களை விவரித்திருப்பதிலிருந்து ஆய்ந்தெடுத்து கோர்த்து பாரிபாஷிக சொற்கள், ந்யாயங்கள், முக்கியமான விஷயங்கள், திவ்ய ப்ரபந்தங்களின் அருஞ்சொற்கள், அவற்றிற்கு மூலமான வேதச்சொற்கள், உபயவேதாந்த ஐககண்ட்யம் (ஒற்றுமை) முதலியன ப்ராமாணிகமாக நம் மதத்தின்

வரலாற்றையும் வளர்ச்சியையும் அறிய உதவுகின்றன. இப்படி மிக நெடுநோக்குடன் ஸ்ரீமதழகியசிங்கர் ஸாதித்த இச்செயல் போற்றத்தக்கது.

இக்கோஶத்தை இயற்றுவதில் கலந்துகொண்ட மஹாவித்வான்கள் - ஸ்ரீமதுபயவே. திருவரங்கம் திருமலை தாதாசார்யர், பாதூர் ராகவாசார்யர், வில்லிவலம் நாராயணாசார்யர், நாவல்பாக்கம் ராஜகோபால தாதாசார்யர், கோழியாலம் ஶடகோபாசார்யர் ஆவர். இதின் முன்னுரையில், நம் ஸம்ப்ரதாயகுருபரம்பரை விரிவாக விளக்கப்பட்டுள்ளது. பிறகு, கோஶங்களைப் பற்றிப் பொதுவாகவும், இக்கோஶத்தின் தேவை, அதை உண்டாக்க ஸ்ரீ.உ.வே. தி.தி.ஸ்வாமி இஞ்சிமேட்டு ஸ்ரீமதழகியசிங்கரை ஆஶ்ரயித்தது, ஸ்ரீமதழகியசிங்கர் இயற்கையான வண்மையாலும், உலகுய்யவேண்டும் திருவுள்ளக்கிடக்கையாலும், அறிவை வளர்க்கும் பாரிப்பாலும், ஸித்தாந்தத்தை அறியத் தேவையான எல்லாப் பொருட்களையும் ஒருங்க இணைக்கும் ஆவலாலும் உடனே ஏற்றது, பின்னர் மஹாவித்வான்கள் ஒன்று சேர்ந்து ஸம்ஸ்க்ருத, த்ரமிடமான இரண்டு பகுதிகளுடன் இதை உருவாக்கியது முதலியன விவரிக்கப் பட்டுள்ளன. இது இன்றளவும் ஸித்தாந்த வித்வான்களுக்கு இன்றியமையாததாகத் தொண்டு புரிகிறது.

இப்படியால் இஞ்சிமேட்டு ஸ்ரீமதழகியசிங்கரின் ஜ்ஞானகைங்கர்யங்களும் ஜ்ஞானாதிஶயமும் சற்றே அனுபவிக்கப்பெற்றன.

ஶுபமஸ்து.